**தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 02 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மாவட்ட செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,231.00 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,216.74 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 14.26 மில்லியன் அதாவது 1.16 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,132.00 | 1,118.42 | 13.58 | 1.20 |
| மூலதனம் | 99.00 | 98.32 | 0.68 | 0.69 |
| மொத்தம் | 1,231.00 | 1,216.74 | 14.26 | 1.16 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 21 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 15 திணைக்களங்களினால் ரூபா 1,530.10 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 1,440.72 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 89.38 மில்லியன் அதாவது 5.8 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

கண்டி மாவட்ட செயலகத்திற்குரிய 25801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 70.00 | 66.77 | 50.00 | 63.57 | 240.00 | 196.14 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

கண்டி மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 857.73 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0044/000 | 0.29 |
| 6000/0000/00/0002/0059/000 | 1.91 |
| 6000/0000/00/0013/0025/000 | 35.94 |
| 6000/0000/00/0016/0006/000 | 679.02 |
| 6000/0000/00/0017/0001/000 | 137.51 |
| 6000/0000/00/0018/0007/000 | 3.06 |
| மொத்தம் | **857.73** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கங்கவட்ட கோரளே பிரதேச செயலகத்தின் பராமரிப்புக் காலம் முடிவடைந்த 05 செயற்திட்டங்களுக்குரிய கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 1,050,000 தொகைக்குரிய கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

04 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 18 சதவீதம் முதல் 36 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

#### 3.2.2 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு

தெல்தொட்ட பிரதேச செயலகத்தில் காணியை கைப்பற்றல் தொடர்பாக 2016 யூன் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 5 செயற்திட்டங்களுக்காக காணி கைப்பற்றும் நடவடிக்கைகள் 03 வருடம் முதல் 21 வருடம் வரையிலான தாமதம் அவதானிக்கப்பட்டது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1.56 மில்லியனாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதி 6 மாதம் முதல் 13 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்ட போதும் அந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

### 3.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| நிதிப்பிரமாணம் 386(5) | 427,452 | கங்கவட்ட கோரளே பிரதேச செயலகம் ஒப்பந்தகாரர்களுக்காக வரையப்பட்ட கையொப்பமிடப்படாத இரண்டு காசோலைகளின் பெறுமதி கொடுப்பனவாக காசேட்டில் உள்ளடக்கப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2017 சனவரி 06 ஆந் திகதி வரையிலும் அபிவிருத்திப் பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பிரதேச செயலக சேவை வழிகாட்டிக் கோவை | | |
| 11.4(iv) ஆம் வழிகாட்டி | 27,633 | பிரதேச செயலகம் மூலம் விநியோகிக்கப்பட்ட பெறுமதியான சான்றிதழுக்காக ஆதனங்களின் பெறுமதியில் 1.15 சதவீதம் அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவிட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கண்டி பட்டினமும் சூழலும் மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச செயலகங்களினால் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பெறுமதியுடனான சான்றிதழ்களை விநியோகிக்கும் போது பெறுமதியில் 1 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டமையால் ரூபா 27,633 தொகையான வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. |

## 3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| பிரதேச செயலகம் | செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | ஆரம்பிக்காமைக்கான காரணம் |
|---|---|---|---|
| ஹத்தறலியத்த | ஹத்தறலியத்த சிறிய ஆறு ஊடாக பாலம் வீதியை அபிவிருத்தி செய்தல் | 300,000 | காணி உரிமையாளர்களின் அதிக எதிர்ப்பு |

| | | | |
|---|---|---|---|
| யட்டிநுவர | பத்கொட சமகி மாவத்தை அபிவிருத்தி செய்தல் | 350,000 | யட்டிநுவர பிரதேச சபையின் மூலம் செய்யப்பட்ட இந்த செயற்திட்டம் தொடர்பாக தனியார் காணி உரிமையாளர்களிடமிருந்து பிரச்சினைகள் காணப்பட்டமை. |
| | அட்டலத்தஹேன வீதி அபிவிருத்தி செய்தல் | 300,000 | நிதிஏற்பாடு போதியளவில் காணப்படாமை |
| மொத்தம் | | ----------------<br>950,000<br>====== | |

(ஆ) நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை பதிவு செய்தல்
---------------------------------------------------------------------------------

பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஒப்பந்தங்களிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்காக ஒப்பந்தத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும், கங்கவட்ட கோரளே பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டில் 02 செயற்திட்டங்களும், 2015 ஆம் ஆண்டின் போது 13 செயற்திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையே 2 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் கடந்திருந்த போதிலும், தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்
-----------------------------------------------------------------------------------------

மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கங்கவட்ட கோரளே பிரதேச செயலகத்திற்குரிய செயற்திட்டமொன்றில் வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி ஒப்பந்தகாரரால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்தின் இறுதிப்பட்டியலில் திட்டமிடல் வடிவமைப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளரினால் திகதி குறிப்பிடப்படாமல் கையொக்கமிடப்பட்டிருந்தது. மேலும் அதற்காக ரூபா 175,229 தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட செயலக வளாகத்தில் கேட்போர்கூடத்துடன் மூன்று மாடி கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) உரிய செயற்திட்டம் குறித்த திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாமையின் காரணமாக ரூபா 10,899,274 தொகையான தாமதக் கட்டணமொன்று ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்பார்வை நிறுவனத்தின் மூலம் வழங்க வேண்டிய திட்டங்கள் குறித்த திகதியில் உள்ளவாறு வழங்கப்படாமையின் காரணமாக அசாதாரணமாக ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டமையின் காரணமாக விலைமுரண்களுக்காக ரூபா 5,124,161 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) சரியான ஆலோசனைச் சேவையொன்று வழங்கப்படாமை மற்றும் சரியான நேரத்தில் உரிய திட்டம் சமர்ப்பிக்கப்படாமை போன்ற குறைபாடுகள் காணப்படும் போது, மதியுரைச் சேவைகளை வழங்குவதற்காக கட்டிடத்

திணைக்களத்திற்கு ரூபா 6,614,701 தொகை 2016 யூலை 15 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கண்டி மாவட்ட செயலகத்தின் புதிய கேட்போர்கூடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றைப் பொருத்தும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) கேள்வி திறக்கப்பட்ட திகதி முதல் முறையே 04 மாதங்களும் ஒரு மாதமும் ஆக அசாதாரணமாக பெறுகைச் செயற்பாடுகள் தாமதப்படுத்தப்பட்டிருந்தன.

(ii) பெறுகைகள் திட்டத்தினதும் பெறுகைகள் கால அட்டவணையினதும் பிரகாரம் இயந்திரம் வழங்கி பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கேள்விதாரர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் கேள்வி அழைப்பு முதல் கேள்வி கையளிக்கப்படும் வரை ரூபா 21,229 தொகையான பயனற்ற செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கண்டி மாவட்ட செயலகத்தின் புதிய கேட்போர்கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் வளிப்பதனாக்கி முறைமை பொருத்தும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கேள்வி திறப்பதற்கு குறிக்கப்பட்ட திகதியில் திறக்கப்படாமல் வேறொரு தினத்தில் கேள்விதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமல் திறக்கப்பட்டிருந்தது.

(ii) கேள்வி திறக்கப்பட்டு கையளிக்கப்படும் வரை காலதாமதமொன்று காணப்பட்டது.

(iii) தெரிவு செய்யப்பட்ட கேள்விதாருக்கு கேள்வி கையளிக்கப்பட்ட போதிலும், அவர்கள் சட்டரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடாதிருந்தும் கேள்விதாரருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் கேள்விதாரர் வைப்புச் செய்திருந்த ரூபா 350,000 தொகையான கேள்விக் காப்பீட்டை அரசுடமையாக்குவதற்கான நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) வெற்றியீட்டிய ஒப்பந்தகாராகத் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சட்டரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருக்கும் போது 2015 ஆம் ஆண்டில் கோரப்பட்ட கேள்விப் பத்திரம் 2016 ஆம் ஆண்டு வரை செல்லுபடியாக்கி ஒப்பந்தம் கையொப்பமிடாமல் நம்பிக்கையை முறித்த நபருக்கு மீண்டும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(vi) தாமதக் கட்டணமாக ரூபா 128,780 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.7 நட்டம் மற்றும் இழப்பு**

மாவட்ட செயலகத்தினதும் 05 பிரதேச செயலகங்களினதும் 08 வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களிலிருந்து ரூபா 3,420,125 தொகையான நட்டம் ஏற்பட்டு 2 வருடங்கள் முதல் 16 வருடங்கள் வரையிலான காலவீச்சினைக் கடந்திருந்த போதிலும், அந்த நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 முகாமைத்தவ நலிவுகள்**

பராயமடையாத பிள்ளைகளின் வயது பூர்த்தியடைந்ததன் பின்னர் சேமிப்புக் கணக்குகள் விடுவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2016 நவம்பர் 19 ஆந் திகதி வரையிலும் வயது 18 வருடங்களும் 5 மாதங்களுக்கும் மற்றும் 33 வருடங்களும் 2 மாதங்களுக்கும் இடையிலான வருடகால வீச்சில் வயது பூர்த்தியான பராயமடையாத 8 பேர்களின் சேமிப்புக் கணக்குககள் உடுநுவர பிரதேச செயலகத்தின் காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 82 | 78 | 4 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 48 | 40 | 12 | 4 |
| (iii) | இரண்டாம் நிலை | 3,362 | 3,098 | 264 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 206 | 160 | 46 | - |
| | மொத்தம் | 3,698 | 3,376 | 326 | 4 |